# வளர் 2010 பரஸ்பர உதவி அறக்கட்டளை-சீர்காழி

(பதிவு எண்:35/10/BKIV)

## ஆண்டு அறிக்கை 2015-16


பதிவு மற்றும் செயல் அலுவலகம்:

48/1, திருவள்ளுவர் நகர், முதல் தெரு, தென்பாதி, சீர்காழி(தா), நாகை(மா)-609110.

**கிளைஅலுவலகம்:**

10/1, தாகூர் ரோடு, சுப்ரமணியபுரம், மயிலாடுதுறை, நாகை(மா)-609203.

## நிறுவன உறுதிமொழி

உலக மக்கள் அனைவரையும் சகோதரராக கருதி வாழும் இந்திய குடிமகன் என்பதிலும் வளர் 2010 பரஸ்பர உதவி அறக்கட்டளையின் உறுப்பினர் என்பதிலும் நான் பெருமை அடைகிறேன்

ஏழ்மையில் வாழும் மக்களின் அறியாமை, வறுமை அகல விழிப்புணர்வு பெற, அல்லும் பகலும் அயராது உழைத்துவரும் வளர் 2010 பரஸ்பர உதவி அறக்கட்டளை என்னும் இயக்கத்தின் கொள்கைகளையும், அதன் சட்டதிட்டங்களையும் முழுமையாக ஏற்றுக் கொள்கிறேன். ஆதரவற்ற, அனாதையாக்கப்பட்ட, உடலால் ஊனமுற்ற மக்களுக்கு ஊன்று கோலாக நின்று, மறுமலர்ச்சி பெற நல்லுணர்வோடு உழைப்பேன் என்றும், என்றென்றும் இயக்கத்தின் தலைமைக்கு கட்டுப்பட்டு விசுவாசத்துடனும், நேர்மையுடனும் உண்மை ஊழியனாகத் தொண்டாற்ற மணப்பூர்வமாக உறுதி கூறுகிறேன்.







**தோற்றம்**

தேனி மாவட்டம் கெங்குவார்பட்டியை தலைமையிடமாக கொண்ட புனித வளனார் மேம்பாட்டு அறக்கட்டளையானது, 2004 –ஆம் ஆண்டு நாகப்பட்டிணம் மாவட்டம், நாகப்பட்டிணம் பகுதியில் உள்ள சுனாமி பாதிக்கப்பட்ட பகுதியின் மீட்புபணிகள் மற்றும் வளர்ச்சியை கருத்தில் செயல்பட துவங்கியது. பின்னர் அதன் தொடர்ச்சியாக நீடித்த நிலைத்த வளர்ச்சியையும், மக்களின் சுயசார்புத்தன்மையை ஏற்படுத்தவும் மகளிர் சுய உதவித் குழுக்கள் துவங்கி அதன் வாயிலாக வங்கித் தொடர்பு ஏற்படுத்தி வந்தது.

அதன் தொர்ச்சியாக மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த குழந்தைகளின் கல்வியின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு மாலை நேரக் கல்வி செயல்படுத்தியது இதன் மூலம் கல்வி முன்னேற்றத்திற்கு உதவும் வகையில் இலவச சீருடை, கற்றல் உபகரணங்கள் வழங்கியுள்ளது. மேலும் மகளிர் குழுக்களுக்கு சுழல்நிதி கடன் மானியத்துடன் கூடிய தொழில் கடன் பெற்று தருவது, அரசு உதவி திட்டங்கள் பெற்றுத் தருவது சுகாதார விழிப்புணர்வு பயிற்சியும் வழங்கி வந்தது.

தொடர்ந்து நாம் பயனாளிகள் நிலையில் இருந்து பங்கு தாரர்களாகவும் நம்முடைய தேவைகள் மற்றும் பிரச்சினைகளுக்கு நாமே நிவர்த்தி செய்து கொள்ளவும் நிலைத்த நீடித்த சுய சார்புடைய அமைப்பாக செயல்படுவதற்கு தேவையான பயிற்சிகளும் வழிகாட்டுதலும் அளித்தது.

மேற்கண்ட பயற்சிகள் வழிகாட்டுதலின் அடிப்படையில் நமது பங்கேற்புடன் வளர் 2010 பரஸ்பர உதவி அறக்கட்டளையானது உறுவாக்கப்பட்டு 04.02.2010ல் ஒரு சுய சார்புடைய மக்கள் அமைப்பாக செயல்பட்டு வருகிறது.

**நமது இலட்சியம்:**

கிராமப்புற சமுதாயத்தை அதிகாரப்படுத்துதலின் மூலமாக ஒரு நிலைத்த நீடித்த சமுதாயம் சார்ந்த நிறுவனமாக வளர்த்தல்.

**இலக்கு பகுதிகள்:**

- சீர்காழி தாலுக்கா, கொள்ளிடம் தாலுக்கா, மயிலாடுதுறை தாலுக்கா, குத்தாலம் தாலுக்கா, மற்றும் அதனை உள்ளடக்கிய கிராமங்களையும் நமது இலக்கு பதிகாளக எடுத்துக்கொண்டு நமது பணிகளை ஆற்றிவருகின்றோம்.

**நிர்வாக குழு உறுப்பினர்கள்:**

- முதலில் கிராமவாரியாக உள்ள குழுக்களை ஒருங்கிணைத்து தேர்தல் நடத்தப்பட்டு தங்களுக்கான பிரதிநிதிகளாக 15 பேரை தங்களது சுயஉதவிக்குழுக்களிலிருந்து தேர்ந்தெடுத்தனர்.
- அந்த 15 பிரதிநிதிகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 3 பேரும் நிரந்தர உறுப்பினரான ஒருவரும் நிர்வாக குழு உறுப்பினர்கள் ஆவார்கள்.
  - சகோ.ஜ.ஜெபாஸ்டியன்,
    (நிரந்தர உறுப்பினர்)
  - திருமதி.எம்.கற்பகம்,
    புதுப்பட்டிணம் (மகளிர் குழு பிரதிநிதி)

- திருமதி.ஆர்.கலைச்செல்வி,
  வழுதலைக்குடி (மகளிர் குழு பிரதிநிதி)
- திருமதி.பி.ரேணுகா,
  மங்கைமடம் (மகளிர் குழு பிரதிநிதி)
- திருமதி.எம்.இராமேஸ்வரி,
  சூரைக்காடு (மகளிர் குழு பிரதிநிதி)

சென்ற ஆண்டின் சாதனைகள்: (2015-16)

✓ மொத்த மகளிர் சுய உதவிக்குழுக்கள்- 108

- இதில் இந்த ஆண்டு . 84 புதிய குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு மொத்தமாக 108 சுயஉதவிக்கள் நமது அறக்கட்டளையின் மூலம் செயல்பட்டு வருகிறது.
- இந்த ஆண்டில் புதிதாக இணைந்த குழுக்கள் விபரம்:

| S. No. | Village Name | SHG Name / Center Name | No of Member |
|---|---|---|---|
| 1 | Thandavankulam | Valar Sithivinayagapuram | 14 |
| 2 | Thandavankulam | Valar Sithivinayagapuram-A | 17 |
| 3 | Vettaiyampadi | Valar Vettaiyampadi | 20 |
| 4 | Nanthiyanallur | Valar Thamarai | 13 |
| 5 | Athukudi | Valar Kulandhai Ezhu | 17 |
| 6 | Sattanathapuram | Valar Sattanathapuram-A | 17 |
| 7 | Melapalaiyam | Valar Melapalaiyam | 15 |
| 8 | Puthupattinam | Valar Putupattinam-A | 17 |
| 9 | Thenpathi | Valar Voc nagar | 15 |
| 10 | Thillavidangal | Valar Thillaividangal | 19 |
| 11 | Thirumullaivasal | Valar Thirumullaivasal | 15 |
| 12 | Thirumullaivasal | Valar Thirumullaivasal-A | 24 |
| 13 | Karaimedu | Valar Karaimedu | 27 |
| 14 | Singarathoppu | Valar Singarathoppu-A | 16 |
| 15 | Thiyagarajanagar | Valar Mallikai | 22 |
| 17 | Madhiravelur | Valar Madhiravelur | 20 |
| 18 | Madhiravelur | Valar Madhiravelur-A | 34 |
| 19 | MuthuKrishnapuram | Valar Sri Ram | 15 |
| 20 | Melavadi | Valar Sri Maha | 15 |
| 21 | Allivilagam | Valar Kurinji | 18 |
| 22 | Thittai | Valar Samanthi | 15 |
| 23 | Chiyalam | Valar Chiyalam | 16 |
| 24 | Vadagal | Valar Veeran | 13 |
| 25 | Utchimedu | Valar Suriyagandhi | 15 |
| 26 | Varisaipathu | Valar Thillaikaliyamman | 15 |
| 27 | Thandavankulam | Valar Thandavankulam | 13 |
| 28 | Madhanam | Valar Sri Muthumarriyamman | 25 |
| 29 | Perunthottam | Valar perunthottam | 20 |
| 30 | Perunthottam | Valar Omsakthi | 23 |
| 31 | Perunthottam | Valar Senthamarai | 15 |
| 32 | Thennalagudi | Valar Thennalagudi | 26 |
| 33 | Thennalagudi | Valar Mullai | 18 |
| 34 | Erukkur | Sakthivinayagar | 15 |
| 35 | Erukkur | Valar Eshwari | 15 |
| 36 | Erukkur | Valar Rameshwari | 14 |
| 37 | Valuthalaikudi | Valar valuthalaikudi | 17 |
| 38 | Valuthalaikudi | Valar Urimaikural | 15 |
| 39 | Valuthalaikudi | Valar Tamil | 19 |
| 40 | Sithankathirupu | Valar Amman | 15 |
| 41 | Mangaimadam | Valar Sri Krishna | 25 |
| 42 | Kollidam | Valar Vetrivinayagar | 12 |
| 43 | Kadavasal | Valar Gandhinagar | 16 |
| 44 | Vadagal | Valar vadagal -A | 29 |
| 45 | Bhatharakudi | Valar Subam | 13 |
| 46 | Bhatharakudi | Valar Vanavil | 15 |
| 47 | Surakkadu | Valar Thiruvalluvar | 16 |
| 48 | Annan kovil | Kamatchiyamman | 15 |
| 51 | Puthupattinam | Valar Sembaruthi | 15 |
| 52 | Puthupattinam | Valar Kalipaumar | 22 |
| 53 | Puthupattinam | Valar Velmurugan | 14 |
| 54 | Mannikavasal | Valar Pasumai | 15 |
| 55 | Nallur | Valar Star | 19 |
| 58 | Thirukaruhavur | Valar Vinayagar | 20 |
| 59 | Thirukaruhavur | Valar Elankaliyamman | 22 |
| 64 | Tharkasu | Valar Senbagam | 15 |
| 65 | Tharkasu | Valar Ponthalir | 17 |
| 66 | Tharkasu | Valar Thulasi | 14 |
| 68 | Thirumullaivasal | Valar Bismi | 19 |
| 69 | Thirumullaivasal | Valar Thendral | 15 |
| 71 | Elaiyamadhukudam | Valar Parasakthi | 14 |
| 72 | Elaiyamadhukudam | Valar Omsakthi | 16 |
| 73 | Vedharajapuram | Valar Muthalamman | 15 |
| 74 | Nallanayagapuram | Valar Sivan | 19 |
| 79 | Puthur | Valar Malligai | 19 |
| 80 | Senthankudi | Valar Valar Perai | 19 |

| | | | |
|---|---|---|---|
| 83 | Taikkal | Valar Thamarai | 14 |
| 84 | Puthur | Valar Sivasakthi | 15 |
| | | | 1173 |

- இந்த ஆண்டில் கூட்டமைப்பிலிருந்து விலகிய குழுக்கள் விபரம்:

| S. No. | Village Name | SHG Name / Center Name | No of Member |
|---|---|---|---|
| 1 | Kathirrupu | lassal yogalakshmi | 8 |
| 2 | Ananthankuthan | lassal indhiraganthi | 5 |
| 3 | Kappiyakudi | Lassal annaivelankanni | 6 |
| 4 | Thirunagiri | lassal jayam | 5 |
| 5 | Valuthalaikudi | lassal sri amman | 7 |
| 6 | Valuthalaikudi | lassal mey flower | 6 |
| 7 | Karkovil | lassal murugan | 4 |
| 8 | Thenpathi | lassal sinthamani | 6 |
| 9 | Suraikadu | lassal kalpanaswala | 6 |
| 10 | Thandavankulam | lassal punnagai | 4 |
| 11 | Thandavankulam | lassal sevanthi | 5 |
| 12 | Periyakoppiyam | lassal kaliyamman | 4 |
| 13 | Periyakoppiyam | lassal angalaparameshwari | 5 |
| 14 | Periyakoppiyam | lassal devamadha | 4 |
| 15 | Periyakoppiyam | lassal thalampoo | 4 |
| 16 | Thirunagiri | lassal valarperai | 5 |
| 17 | Thirunagiri | lassal sai | 6 |
| 18 | Mangaimadam | om sakthi | 4 |
| 19 | Edamanal | lassal jeva oli | 4 |
| 20 | Ammapallam | lassal kalanjiyam | 6 |
| 21 | Thirumullaivasal | lassal limra | 4 |
| 22 | Tharkasu | lassal sri mahalakshmi | 5 |
| 23 | Puthupattinam | lassal venkadachalapathi | 4 |
| 24 | Tharkasu | Lassal Jayamaruthi | 5 |
| 25 | Kuchipalaiyam | lassal indhiraganthi | 4 |
| 26 | Kuravalur | lassal sri balakaliyamman | 7 |
| 27 | Kuchipalaiyam | lassal malaiyalaveeran | 6 |
| 28 | Kuravalur | lassal pottamman | 5 |
| 29 | Thennampattinam | lassal thural | 3 |
| 30 | Thirunagiri | lassal sevanthi | 5 |
| 31 | Kunnam | lassal mallikai | 6 |
| | | | 158 |

✓ மொத்த மகளிர் சுயஉதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் - 1289

- இந்த ஆண்டு புதிதாக 1173 உறுப்பினர்கள் நமது சுயஉதவிக்குழுக்களில் உறுப்பினர்களாக இணைந்துள்ளனர். மேலும் மொத்தம் 1289 உறுப்பினர்கள் நமது சங்கங்களின் மூலம் பயனடைந்து வருகின்றனர்.

✓ பயனடையும் கிராமங்கள் - 48

- நாகை மாவட்டத்தில் சீர்காழி, கொள்ளிடம், மயிலாடுதுறை மற்றும் குத்தாலம் ஆகிய 4 ஒன்றியங்களில் உள்ள 48 கிராமங்கள் பயனடைந்து வருகின்றன.

✓ நுண் கடன்:

- நமது குழுக்களில் உள்ள உறுப்பினர்களின் வறுமானம் பெருக்குத் திட்டத்திற்காக 108 சுயஉதவிக் குழுக்கள் இந்த ஆண்டு நுண்கடன் பெற்றுள்ளனர்.
- இதில் ரூ.2,57,50,000 (இரண்டு கோடியே ஐம்பத்து ஏழு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய்) கடனாக பெற்று சிறுசிறு வருமான பெருக்குத் திட்டங்களில் ஈடுபட்டு பொருளாதர ரீதியாக முன்னேற்றமடைய உதவியாக இருந்துள்ளது.
- பெற்ற கடன் தொகையை உறுப்பினர்கள் முறையாக திரும்பசெலுத்தி வருகின்றனர். தற்போது கடன் நிலுவையாக ரூ. 1,47,81,511 (ஒரு கோடியே நாற்பத்து ஏழு லட்சத்து எண்பத்தோராயிரத்து ஐநூற்று பதினொன்று மட்டும் உள்ளது.

✓ சமூக பாதுகாப்புத் திட்டம்:

- நமது கூட்டமைப்பின் மூலம் செயல்படுத்தப்பட்டுவரும் சமூக பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் மொத்தம் 1289 உறுப்பினர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்.
- மேலும் இத்திட்டத்தின் கீழ் 11 உறுப்பினர்கள் ரூ.25000 திட்டப்பலன்கள் பெற்றுள்ளனர்.
  - உறவினர் ஈமச்சடங்கு நிதி ரூ.3000ம் பெற்றவர்கள் - 7
  - தாய்-சேய் ஆரோக்ய உதவி நிதி ரூ.1000ம் பெற்றவர்கள் - 4

✓ கிராம அளவிலான விழிப்புணர்வு:

- புதிய குழுக்கள் அனைத்திற்கு நுண்கடன் குறித்த விழிப்புணர் கொடுக்கப்பட்டு அவர்களது பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ற தொழிலை தேர்ந்தெடுத்தல் மேலும் அதற்கு தேவையான நுண்கடன் பெறுதல், பயன்படுத்துதல் அதல் அதை திரும்ப செலுத்துதல் குறித்து விழிப்பணர்வு அளிக்கப்பட்டு தேவையான சமயங்களிலில் நுண்கடன் திட்டத்தை பயன்படுத்துகின்றனர்.
- அரசு திட்டங்களை பெறுதல் குறித்து தேவையான ஆலோசனைகளும் விளக்கங்களும் கொடுக்கப்பட்டுள்ளது.

✓ பயிற்சிகள்:

- நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கான பொறுப்புகள் மற்றும் கடமைகள் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டு பொறுப்பாளார்கள் தங்களது கடமைகளை செவ்வனே ஆற்றிவருகின்றனர்.


தொழில் முனைவோருக்கான பயிற்சி நடத்தப்பட்டு நமது திட்டப்பகுதிகளில் பதிய தொழில் முனைவோர்களை உறுவாக்கும் விதமாக பயிற்சியளிக்கப்பட்டு புதிய தொழில் துவங்கவும், ஏற்கனவே செய்யும் தொழிலை விரிவுபடுத்தவும் உதவியாக இப்பயிற்சி அமைந்தது.

<u>நிதிநிலை அறிக்கை (ஆடிட் ரிப்போர்ட்)</u>


உறுப்பினர்களின் ஆண்டு சந்தா, பரிசீலனைக்கட்டணம், வளர் ஆதித்தி நிதி நிறுவனத்திலிருந்து ஊக்கத்தொகை ஆகிய வகைகளில் நமக்கு வருமானமாக எழுபத்து மூன்று லட்சத்து எழுபத்தைந்தாயிரத்து தொள்ளாயிரத்து முப்பது ரூபாய் திரட்டப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| மொத்த வருமானம் | : | ரூ.7375930 |
| மொத்த செலவீனம் | : | ரூ.2437550 |
| மீத இருப்பு | : | ரூ.4938380 |


அலுவலக வாடகை, பணியாளர் சம்பளம் மற்றும் படிகள், அச்சு மற்றும் பிரிண்டிங் செலவீனங்கள் மற்றும் வங்கி கட்டணங்கள், வருமான வரி போன்ற வகையறாக்களின் மூலம் இருபத்துநான்கு இலட்சத்து முப்பத்துஏழாயிரத்து ஐநூற்று ஐம்பது ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. செலவீனம் போக மீத இருப்பாக ரூபாய் நாற்பத்து ஒன்பது இலட்சத்து முப்பத்து எட்டாயிரத்து முன்னூற்று எண்பது மட்டும் உள்ளது.



VALAR 2010 MUTUAL BENEFIT TRUST -SIRKALI



VALAR 2010 MUTUAL BENEFIT TRUST - SIRKALI



VALAR 2010 MUTUAL BENEFIT TRUST - SIRKALI

எதிர்கால திட்டம் (2016-17):


- 60 புதிய குழுக்களை நமது திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டு 1200 உறுப்பினர்கள் பயன் அடைந்திருப்பர்.
- இந்தாண்டு இறுதிக்குள் 1800 உறுப்பினர்களுக்கு ரூ.3 கோடி கடன் தொகை வழங்கப்பட்டு இருக்கும்.
- சுய உதவிக்குழுக்களை பலப்படுத்தும் விதமாக ஊக்குநர், பிரதிநிதி பயிற்சி, தலைமைத்துவ பயற்சி பதிவேடுகள் பராமரிப்பதற்கான பயிற்சிகளை அளித்தல்.
- நமது உறுப்பினர்களின் இழப்பினால் அவர்களது குடும்பத்தில் ஏற்படும் பொருளாதார இழப்பினை சமாளிக்கும் விதமாக நாம் வரையறுத்த சமூக பாதுகாப்பு திட்டத்தை செயல்படுத்துதல்.
- கூட்டமைப்பு பொறுப்பாளர்களுக்கு தேவையான பயிற்சிகள் அளிக்கப்பட்:டு நமது கூட்டமைப்பின் நிர்வாகத்திறன் மேம்படுத்துதல்.
- திறமையாக தொழில் செய்து கொண்டிருக்கும் நமது குழு உறுப்பினர்களுக்கு தொழிலை விரிவாக்கும் விதமாக தொழில் கடன் வழங்கி அவர்களது வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துதல்.
- கிராமங்களில் உள்ள அடிப்படை தேவைகள் மற்றும் பிரச்சினைகள் குறித்து குழுக்களின் மூலம் கூட்டங்களில் கலந்துரையாடல் செய்யப்பட்டு முக்கியமான தேவைகளில் கவனம் செலுத்தப்பட்டு பூர்த்தி செய்யும் விதமாக திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்படும். (குறிப்பாக குழந்தைகளின் கல்வி, இடைநிறுத்தம், மகளிர் சுகாதாரம், மாற்று எரிசக்தி, போதை பழக்க வழக்கங்கள், மரம் நடுதல் மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு)



வெற்றிக் கதை:

## வளர் 2010 **MBT** சீர்காழி

நம் நிறுவனத்தில் இணைந்துள்ள சீர்காழி வட்டம் பாதரக்குடி கிராமத்தை சேர்ந்த வளர் சுபம் கூட்டுப் பொறுப்புக் குழு 15 உறுப்பினர்களை கொண்டு 21/05/2016 அன்று நம் நிறுவனத்தில் கடன் பெற்றது.





இந்நிலையில் குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான திருமதி வனஜா அவர்கள் கடந்த 30 வருடமாக எல்லடை மற்றும் சிப்ஸ் செய்யும் தொழிலை குடிசை தொழிலாக செய்து வந்தார். இதன் மூலம் அவர்களுக்கு தினமும் ரூ 4000 விற்பனை ஆனது. அதில் ரூ 3000 செலவு போக மீதம் ரூ 1000 லாபம் கிடைத்துள்ளது. மேலும் தொழிலை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் நம் நிறுவனத்தில் கடன் பெற்று தொழிலை விரிவுபடுத்தினார். இத்தொழிலில் தற்போது 7 பணியாளர்கள் வேலை செய்கிறார்கள். அதில் 5 நபர்கள் நம் குழுவை சேர்ந்தவர்கள். மேலும் வனஜா அவர்களின் மகன் மற்றும் கணவர் இருவரும் தங்களுடைய சொந்த வாகனத்தில் திருக்கடையூர், சீர்காழி, மயிலாடுதுறை, கொள்ளிடம், புத்தூர் ஆகிய பகுதிகளில் உள்ள கடைகளுக்கு விநியோகம் செய்கிறார்கள். தற்போது நம் நிறுவனத்தில் கடன் பெற்று தொழிலை விரிவுபடுத்தியதன் மூலம் தினமும் ரூ.8000 அளவிற்கு சரக்குகள் விற்பனை செய்ய முடிவதாகவும் அதில் ரூ6000 செலவு போக மீதம் ரூ2000 இலாபம் ஈட்ட முடிவதாகவும் கூறுகின்றார். மேலும் இந்த வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்த நமது கூட்டமைப்பினை பெருமிதத்தோடு கூறிவருகிறார்.